RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 249 | செப்டம்பர் 13, 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# டெல்லியில் ‘பிரிக்ஸ்’ மாநாடு கோலாகலம்: ரஷ்ய அதிபர் புதின் - பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி: செப்.13-

டெல்லியில் 18-வது ‘பிரிக்ஸ்’ உச்சி மாநாடு இன்று கோலாகலமாகத் தொடங்குகிறது. இதில் பங்கேற்க இந்தியா வந்துள்ள ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா, சவுதி அரேபியா ஆகிய 11 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தக் கூட்டமைப்பின் 18-வது உச்சி மாநாடு டெல்லி பாரத் மண்டபத்தில் இன்று தொடங்குகிறது. இதில் ரஷ்ய அதிபர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங் உட்பட 11 உறுப்பு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கின்றனர். மேலும் பல்வேறு நட்பு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கின்றனர்.

மாநாட்டை ஒட்டி டெல்லியில் மத்திய படைகள், டெல்லி காவல் துறையைச் சேர்ந்த 30,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு உள்ளனர். பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முறியடிக்க போர் விமானங்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், ட்ரோன் எதிர்ப்பு சாதனங்கள், ஆகாஷ் ஏவுகணைகள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

‘பிரிக்ஸ்’ மாநாட்டில் பங்கேற்க ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் நேற்று டெல்லி வந்தடைந்தார். விமான நிலையத்தில் அவரை, மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் வரவேற்றார். பிறகு டெல்லி மவுரியா ஓட்டலுக்கு அதிபர் புதினும் அவரது குழுவினரும் சென்றனர். இதைத் தொடர்ந்து டெல்லி பாரத் மண்டபத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு ரஷ்ய அதிபர் புதினைப் பிரதமர் மோடி சந்தித்தார். இருவரும் ஆரத் தழுவி பரஸ்பரம் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர். பின்னர் சுமார் 45 நிமிடங்கள் பல்வேறு விவகாரங்கள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தினர்.




போர் விமானங்கள்: ரஷ்யாவிடம் இருந்து எஸ் - 400 ஏவுகணைகள், எஸ்.யு.57 போர் விமானங்களை வாங்குவது குறித்து தலைவர்கள் இருவரும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து பிரம்மோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வருகின்றன. அடுத்த கட்டமாகப் பிரம்மோஸ் - என்ஜி ஏவுகணை தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக இருவரும் ஆலோசனை நடத்தினர். ரஷ்யாவிடம் இருந்து அதிகளவில் கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்து வருகிறது. மேலும் ரஷ்யாவிடம் இருந்து அரிய வகை கனிமங்களை வாங்கவும் மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. இதுதொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

டெல்லி பாரத் மண்டபத்தின் ஒரு பகுதியில் சர்வதேச தொழில் கண்காட்சி நடைபெறுகிறது. இதில் 120-க்கும் மேற்பட்ட இந்திய, ரஷ்ய நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தக் கண்காட்சியைப் பார்வையிட பிரதமர் மோடியும் அதிபர் புதினும் ஒரே காரில் சென்றனர். ரஷ்ய அதிபர் பிரத்யேகமாகப் பயன்படுத்தும் ஆரஸ் செனட் ரகக் காரில் தலைவர்கள் இருவரும் பயணம் செய்தனர்.

பொருளாதார பாலம்: டெல்லி பாரத் மண்டபத்தில் நேற்று மாலை ‘பிரிக்ஸ்’ தொழில் கூட்டமைப்பின் மாநாடு நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது: உலகின் சராசரி பொருளாதார வளர்ச்சி 2.5 சதவீதமாக உள்ளது. ‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 4 சதவீதமாக இருக்கிறது. உலக பொருளாதாரத்தில் 40 சதவீதம் ‘பிரிக்ஸ்’ நாடுகளின் பங்களிப்பாக உள்ளது. உலக மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் ‘பிரிக்ஸ்’ நாடுகளில் வாழ்கின்றனர்.

எங்கள் நாட்டின் பணப் பரிவர்த்தனைகளில் 50 சதவீதம் டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. சர்வதேச வணிகத்தை மேம்படுத்த வேண்டும். இதற்கு சுதந்திரமான கடல் போக்குவரத்து உறுதி செய்யப்பட வேண்டும். சர்வதேச வர்த்தகத்தில் பல்வேறு முட்டுக்கட்டைகள் ஏற்பட்டு உள்ளன.

இந்தச் சூழலில் பொருளாதார பாலங்களை இந்தியா உருவாக்கி வருகிறது. சுமார் 40-க்கும் மேற்பட்ட நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளோம். உலக பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா ஊக்கம் அளித்து வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

ரஷ்ய அதிபர் புதின் பேசும்போது, “மேற்கத்திய நாடுகள் பலவீனம் அடைந்து வருகின்றன. உலக பொருளாதாரத்தில் அந்த நாடுகளின் பங்கு 29 சதவீதமாக மட்டுமே உள்ளது. ‘பிரிக்ஸ்’ நாடுகளின் பங்கு 40 சதவீதமாக உள்ளது" என்று தெரிவித்தார்.

ரஷ்ய அரசின் அணு சக்தி நிறுவனமான ரோசாடாம் தலைமை செயல் அதிகாரி அலெக்ஸி லிகாச்சேவ் கூறுகையில், ‘‘அணுசக்தி துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக ரஷ்யா - இந்தியா இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு உள்ளன. இந்த ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்தாகும். மேலும் அணுசக்தி துறையில் ‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. குறிப்பாகப் பிரிக்ஸ் நாடுகளில் பெரிய, சிறிய ரக அணுமின் நிலையங்களை அமைக்க ரஷ்யா உதவி செய்யும்” என்று தெரிவித்தார்.

புதினுக்கு திருக்குறள் நூல் பரிசு: டெல்லி பாரத் மண்டபத்தில் அதிபர் புதினைச் சந்தித்த போது, ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை பிரதமர் மோடி பரிசாக வழங்கினார். அப்போது மோடி கூறும்போது, “சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ் கவிஞர் திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். அனைத்து வாழ்க்கைநெறிகளும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. ரஷ்ய மொழி திருக்குறளால் இரு நாடுகளின் மக்கள் இடையிலான உறவு மேம்படும். இரு நாடுகளின் உறவையும் இந்த நூல் வலுப்படுத்தும்’’ என்றார். பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவிலும் திருக்குறளைப் புகழ்ந்து கருத்துத் தெரிவித்துள்ளார்.



■ முன்னாள் முதலமைச்சர் அதிமுக கழக பொதுச் செயலாளர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களை சந்தித்து ஆதித்தமிழர் முன்னேற்றக் கழக தலைவர் நாகராசன் தலைமையில் தாராபுரம், மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கு ஆதித்தமிழர் முன்னேற்றக்கழகம் ஆதரவு தெரிவித்த போது குண்டடம் காளிமுத்து மாவட்டசெயலாளர் தாராபுரம் திருப்பூர்

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் தவெக பொறுப்பாளர்கள் நியமனம்

சென்னை: செப்.13-

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலுக்கு தவெக சார்பிலான தேர்தல் பொறுப்பாளர்களை அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தவெக தலைவரும், முதல்வருமான விஜய் வெளியிட்ட அறிக்கையில், ‘வருகின்ற அக்டோபர் 6-ம் தேதி நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்ளத் தேர்தல் பணிக்குழுவும், பணிகளைக் கண்காணிக்க தேர்தல் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள். தேர்தல் கண்காணிப்பாளர்களாக அமைச்சர்கள் ஆனந்த், செங்கோட்டையன், நிர்மல் குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மதுராந்தகம் தேர்தல் பணிக்குழு:

மதுராந்தகம் தொகுதி பொறுப்பாளராக அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவும், இணைப் பொறுப்பாளர்களாக அமைச்சர்கள் பி.ராஜ்குமார், தென்னரசு, வினோத் ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.




துணைப் பொறுப்பாளர்களாக சோழிங்கநல்லூர் எம்எல்ஏ சரவணமூர்த்தி, செங்கல்பட்டு எம்எல்ஏ தியாகராஜன், திருப்போரூர் எம்எல்ஏ விஜயராஜ், பல்லாவரம் எம்எல்ஏ காமாட்சி, செங்கல்பட்டு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பாலாஜி (எ) மணிகண்டன் ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

தாராபுரம் தேர்தல் பணிக்குழு:

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளராக அமைச்சர் அருண்ராஜ், இணைப் பொறுப்பாளர்களாக அமைச்சர்கள் விஜய் பாலாஜி, விஜயலட்சுமி, லோகேஷ் தமிழ்ச்செல்வன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

துணைப் பொறுப்பாளர்களாக திருப்பூர் தெற்கு தொகுதி எம்எல்ஏ பாலமுருகன், திருப்பூர் வடக்கு தொகுதி எம்எல்ஏ சத்தியபாமா, பல்லடம் எம்எல்ஏ ராம்குமார், நாமக்கல் எம்எல்ஏ திலீப், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சத்யா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட குழுவினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்வார்கள். தேர்தல் கண்காணிப்பாளர்கள், இரண்டு தொகுதிகளின் தேர்தல் பணிகளைக் கண்காணிப்பார்கள்.

அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட கழகத் தோழர்கள் அனைவரும் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். வெற்றிச் சின்னமாம் விசில் சின்னம், மீண்டும் வாகை சூட வேண்டும். இடைத்தேர்தல் வரலாற்றிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்கிற புதிய வரலாறு படைக்கும் வகையில் அனைவரும் தேர்தல் பணியாற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொகுதிகளில் நம் வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நமது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளைத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக விரைவில் முன்னெடுப்போம்’ எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழறிஞர் சாலமன் பாப்பையாவின் உடல் அரசு மரியாதையுடன் தகனம்

மதுரை: செப்.13-

மறைந்த பேராசிரியரும், தமிழறிஞருமான சாலமன் பாப்பையாவின் உடல் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

புகழ்பெற்ற பட்டிமன்ற நடுவரும் தமிழ் மொழியில் ஆளுமை பெற்றவருமான பேராசிரியர் சாலமன் பாப்பையா, தனது 90-வது வயதில் உடல் நலக்குறைவால் காலமானார். மதுரையில் அவரது உடலுக்கு தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள், அரசியல் கட்சியினர், பொதுமக்கள், திரளானோர் அஞ்சலி செலுத்தினர்.

அவரது மறைவையடுத்து முதல்வர் விஜய், முன்னாள் முதல்வர்கள் ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், அமைச்சர்கள், திரைக்கலைஞர்கள் தங்களது இரங்கலை தெரிவித்தனர்.



சாலமன் பாப்பையாவின் இறுதி ஊர்வலம் இன்று காலை 10 மணிக்கு தொடங்கியது. அவரது உடலை சுமந்து வந்த வாகனத்துக்கு பொதுமக்கள் வழிநெடுக அஞ்சலி செலுத்தினர். மதுரை வெப் மெமோரியல் தேவாலயத்தில் வைத்து உறவினர்கள் முன்னிலையில் அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. அதன்பின்னர் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் சாலமன் பாப்பையாவின் உடலுக்கு மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, அமைச்சர்கள் நிர்மல் குமார், விஸ்வநாதன் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இறுதிச் சடங்கில் துப்பாக்கி குண்டுகள் முழக்கம் இல்லாமல் சாலமன் பாப்பையாவுக்கு அரசு மரியாதை அளிக்கப்பட்டது. இதனையடுத்து சாலமன் பாப்பையா உடல் தகனம் செய்யப்பட்டது.

# திருப்பரங்குன்றம் முழு மலையையும் அளவீடு செய்ய முடியாது: உயர் நீதிமன்றத்தில் இந்து சமய அறநிலைய துறை வாதம்

மதுரை: செப்.13-

மதுரையை சேர்ந்த கே.கே. ரமேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: திருப்பரங்குன்றம் மலைப்பகுதி முழுவதையும் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரவும், தொல்லியல் துறையிடம் அனுமதி பெற்ற பிறகே, திருப்பரங்குன்றம் மலை மீது ஏறிச் செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடக்கோரி வழக்கு தொடர்ந்தேன்.

இதனை விசாரித்த நீதிமன்றம், மனுதாரர் புதிதாக மனு அளிக்கவும், மனுவை அதிகாரிகள் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டது.

அதன்படி மனு அளித்தும் அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே உயர் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.



இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அறநிலையத் துறை வழக்கறிஞர் வாதிடுகையில், முழு மலையையும் அளவிட முடியாது.

மனுதாரர் கோரிக்கையும், நீதிமன்ற உத்தரவும் வெவ்வேறாக உள்ளன. எனவே உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோம். உச்ச நீதிமன்றம் சம்மபந்தப்பட்ட நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் தேடிக்கொள்ள உத்தரவிட்டுள்ளது என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், கோயிலை பாதுகாக்கத் தான் உத்தரவிட்டுள்ளோம். இந்த வழக்கு கோயில், தர்கா, தொல்லியல் துறை சம்பந்தப்பட்டது.

இதில் இந்து சமய அறநிலையத் துறைக்கு என்ன வேலை? வேண்டும் என்றால் நீங்கள் இடையீட்டு மனு தாக்கல் செய்து ஆஜராகலாம். அதற்கு அனுமதி வழங்கி விசாரணை செப்.25-க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# உத்தமபாளையம் வட்டத்தில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

தேனி, செப்.13-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் வருகின்ற 16.09.2026-ஆம் தேதி புதன்கிழமையன்று காலை 9.00 மணி முதல் 17.09.2026 -ஆம் தேதி வியாழன்கிழமை காலை 9.00 மணி வரை மாவட்ட ஆட்சித்தலைவர் , அனைத்துத்துறை அலுவலர்களுடன் அரசின் சேவைகள், திட்டங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றினை கள ஆய்வு மேற்கொள்ளும் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நடைபெற உள்ளது. மேலும்,இம்முகாமில்பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை தொடர்பான (பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை கோருதல்,




விபத்து நிவாரணம், குடும்ப அட்டை கோருதல், ஆதி திராவிடர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, விவசாயத்துறை மற்றும் இதர துறைகள் தொடர்பாக) மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் 16.09.2026 -ஆம் தேதி மாலை 4.00 மணிமுதல் 6.00 மணிவரை, உத்தமபாளையம் ஸ்டார் கம்யூனிட்டி ஹால் கூட்ட அரங்கில் பொதுமக்களை நேரில் சந்தித்து, மக்களின் கோரிக்கைகளை ஏற்கவும் உள்ளார்.இதில் பட்டா மாறுதல் மனுக்கள், இ சேவை மூலம் பதிவு செய்வதற்கு ஏதுவாக உத்தமபாளையம் ஸ்டார் கம்யூனிட்டி ஹால் கூட்ட அரங்கில் உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகம் மூலம் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இம்முகாமில் உத்தமபாளையம் வட்டத்தினை சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பாக, மனுக்களை கொடுத்து பயன்பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படவுள்ள "தாய்மாமன் தங்க மோதிரம்" திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படவுள்ளது. இதனையொட்டி, திருப்பத்தூர் மாவட்ட அரசு மருத்துவமனையில், தங்க மோதிரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ள இருப்பு அறையை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் ஆர்.கஜலட்சுமி,இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., முன்னிலையில் (11.09.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் மரு.ஞானமீனாட்சி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நா.கலுசிவலிங்கம், வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், மருத்துவர் சிவக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.






# கிருஷ்ணகிரியில் திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

கிருஷ்ணகிரி, செப்.12:

சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் பேசியதாகக் கூறப்படும் ஆணவப் பேச்சைக் கண்டித்து, ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட திமுக சார்பில் இன்று (செப். 12) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள பேறறிஞர் அண்ணா சிலை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன்,Ex.MLA, தலைமை வகித்தார். மேற்கு மாவட்ட திமுக செயலாளர் பிரகாஷ்,Ex.MLA, முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுக தலைவர்களின் அரசியல் வரலாறு மற்றும் தியாகங்களை கொச்சைப்படுத்தும் வகையில் முதலமைச்சர் விஜய் பேசியதாகக் கூறி, திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

“வரலாற்றை கொச்சைப்படுத்தாதே! சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பாற்று! ஆணவப் பேச்சை நிறுத்து!” என முழக்கங்களை எழுப்பி தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றிச்செல்வன், சுகவனம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செங்குட்டுவன், முருகன், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், நகர செயலாளர்கள் அஸ்லாம், வேலுமணி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே வி எஸ் சீனிவாசன், அன்பரசு,ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, கிருஷ்ணகிரி நகர் மன்ற தலைவர் சாவித்திரி,மாவட்ட இளைஞரணி செயலாளர் தினேஷ்குமார்,முன்னாள் நகர செயலாளர் நவாப், முன்னாள் நகர் மன்ற தலைவர் பரிதா நவாப், மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் திமுக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஜெயந்திநகர் கிராமம் CSI பள்ளியில் வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டு சார்பில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நீலகிரி, செப்.13-

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோன்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள C.S.I. பள்ளியில், வெலிங்டன் கன்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி கிண்டியா அறிவுறுத்தலின் படி, சுகாதாரத்துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மை (SWM) விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு திடக்கழிவுகளை முறையாக கையாளுதல், கழிவுகளை உருவாகும் இடத்திலேயே பிரித்துச் சேகரித்தல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக ஈரக் கழிவு, உலர் கழிவு, சானிட்டரி கழிவு மற்றும் சிறப்பு பராமரிப்பு கழிவு என கழிவுகளை தனித்தனியாக பிரித்து வழங்க வேண்டும் என்றும், வீடுகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து உருவாகும் கழிவுகளை





பொறுப்புடன் கையாள வேண்டும் என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026-ன் முக்கிய அம்சங்கள், கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள், கன்டோன்மென்ட் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மற்றும் அதிக அளவில் கழிவு உருவாக்கும் நிறுவனங்களின் பொறுப்புகள் குறித்தும் வெலிங்டன் கண்டோண்மென்ட் சுகாதார ஆய்வாளர் பழனிசாமி பொது மக்களிடையே மிக சிறப்பாக எடுத்துரைத்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஜெயந்திநகர், நல்லப்பன்தெரு, அண்ணாநகர், ஆகிய கிராமங்களை சேர்ந்த கிராம நலசங்கத்தினர், பொது மக்கள், சுகாதார துறை ஊழியர்கள், திரளாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வெலிங்டன் சுகாதார ஆய்வாளர் பூரணி சிறப்பாக மேற்கொண்டு இருந்தார்.

இறுதியில் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் ஜெயந்திநகர் கிராம நல சங்கத்தின் பொது செயலாளர் A.S.ராஜ்குமார் நன்றி தெரிவித்தார்.

# தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர்.ம.கோவிந்தராவ், நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி, செப்.13-

தேனி மாவட்டம், கம்பம் அரசு மருத்துவமனை, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், முன்னிலையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர்.ம.கோவிந்தராவ்,தமிழ்நாடு அரசின் புதிய திட்டமான தாய்மாமன் தங்கமோதிரம் திட்டதிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.இந்த ஆய்வின்போது, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் கம்பம் அரசு மருத்துவமனையின் மகப்பேறு சிகிச்சைப்பிரிவுக்கு நேரில் சென்று, சிகிச்சைக்கு வரும் கர்ப்பிணிப் தாய்மார்களின் சுயவிபரங்கள் PICME இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு, அதில் ஒரு முகவரியில் கண்ட தொலைபேசி எண்ணைத்தொடர்பு கொண்டு கர்ப்பிணி பெண்ணிடம் அவருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்ததுடன், மருத்துவமனைக்கு நாள்தோறும் பரிசோதனைக்காக வருகின்ற கர்ப்பிணிப் பெண்களிடம் அவர்களின் ஆதார் மற்றும் கைப்பேசி எண்களை இத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் தவறாமல் பதிவு செய்ய வேண்டும் என பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, மருத்துவமனை வளாகத்தில் தாய்மாமன் தங்கமோதிரம் வைக்கப்படவுள்ள தங்கமோதிரம் பாதுகாப்பு அறைகளின் உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளை பார்வையிட்டு, பாதுகாப்பு அறை முழுகண்காணிப்பில் இருக்கும் வகையில் பணியாளர்களை நியமித்திட



வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதுடன், இத்திட்டம் துவக்கப்படுவது முதல் அரசு வழிகாட்டுதலின்படி, பிரசவித்த தாய்மார்கள் மருத்தவமனையை விட்டு (Discharge) செல்லும்போது பச்சிளம் குழந்தைகளுக்கு ஒருகிராம் தங்கமோதிரம் அணிவித்து வழியனுப்பி வைக்கப்பட வேண்டும். அந்தவகையில் இப்பணிகளை திட்டமிட்டு சரியான முறையில் செயல்படுத்த வேண்டும் என மருத்துவர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர், காமயக்கவுண்டன்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள தாய்சேய்நலப் பகுதிக்கு நேரில் சென்று கம்பம் சட்டமன்றஉறுப்பினர் .பி.எல்.ஏ.ஜெகநாத்மிஸ்ரா முன்னிலையில் பார்வையிட்டு, அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறித்ததுடன், பொதுமக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை வழங்கிட வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள மகப்பேறு சிகிச்சைப்பிரிவில் ஆய்வுமேற்கொண்டு, சிகிச்சைக்கு வரும் கர்ப்பிணிப்தாய்மார்களின் சுயவிபரங்கள் PICME இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு, மருத்துவமனை வளாகத்தில் தாய்மாமன் தங்கமோதிரம் வைக்கப்படவுள்ள தங்கமோதிரம் பாதுகாப்பு அறைகளின் உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளை கேட்டறிந்ததுடன், இத்திட்டதினை சிறந்த முறையில் செயல்படுத்திட அறிவுறுத்தினார்.

மேலும் தெரிவிக்கையில்,

தேனி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின் கீழ், தங்க மோதிரங்கள் வழங்கும் வகையில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் கம்பம் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அங்கிருந்து மாவட்டத்தின் பிற அரசுமருத்துவமனைகள்துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எடுத்துச்சென்று, அங்கு பிரசவிக்கும் தாய்மார்களுக்கு வழங்கும் வகையில் பணிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின்கீழ் பயன்பெறவுள்ள கர்ப்பிணிப் தார்மார்களின் விபரங்களை மருத்துவர்களின் ஆலோசனைப்படி பதிவு செய்திட வேண்டும். ஒவ்வொரு நாளும் தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின்கீழ், தங்கமோதிரம் வழங்கும் போது தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான வசதிகளை வழங்கி காலத்தாமதமின்றி தங்கமோதிரங்களை வழங்கி அவர்களை பாதுகாப்பாக வீட்டிற்கு வழியனுப்பி வைக்க வேண்டும் என மருத்துவர்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்.தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, பெரியகுளம் சார் ஆட்சியர் தேவ்லேந்து திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி.துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரோகினி தேவி, மாவட்ட சுகாதார அலுவலர்.வரதராஜன், கம்பம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அலுவலர் பானுமதி, உத்தமபாளையம் வட்டாட்சியர்.பாலசண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# இலவச பொது மருத்துவ பரிசோதனை முகாம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது

செங்கல்பட்டு, செப்.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மலில் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் நடத்தும் அன்னை தெரேசா அம்மா அவர்களின் 29ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 05/09/2026 அன்று பெருந்தலைவர் காமராஜர் மாளிகையில் இலவச கண் பரிசோதனை, பல் பரிசோதனை, பிசியோதெரபி மற்றும் இசிஜி இதுபோன்ற இலவச பொது மருத்துவ பரிசோதனை முகாம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

இம் முகாமிற்கு அறக்கட்டளையின் தலைமை இயக்குனர் செல்வி பி.கவிதா அவர்கள் மற்றும் அறக்கட்டளையின் தலைவர் திருமதி. பி.கலா, கௌரவ தலைவர் எஸ்.அருணகிரி, செயலாளர் எஸ்.தேவி அவர்களின் முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது மேலும் முகாமில் சிறப்பு விருந்தினராக கிறிஸ்டோபர் ஜெயராஜ் Deputy vice president equitas CSR, கிருஷ்ணமூர்த்தி மேனேஜர் CSR equitas, சத்தியமூர்த்தி சமூக ஆர்வலர், ஜெயராமன் பெருந்தலைவர் காமராஜர் மண்டப தலைவர், டாக்டர் பிரியம் பொதுநல மருத்துவர் மாதா காலேஜ் குன்றத்தூர், டாக்டர் நிவேதா பல் மருத்துவர், டாக்டர் பிரியதர்ஷினி பிசியோதெரபிஸ்ட், செல்வ சேகர் லயன்ஸ் கிளப், சுதா ராஜன் பரதநாட்டிய ஆசிரியர் மற்றும் நமது அறக்கட்டளையின் குன்றத்தூர் கிளைச் செயலாளர் பிரகாஷ், வடசென்னை கிளை சுமித்ரா, செயற்குழு உறுப்பினர் பம்மல் சி.மோகன், அனகாபுத்தூர் தேவி தணிகாசலம் மற்றும் மாற்றுத்திறனாளி, முதியோர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மேலும் முகாமிற்கு வந்தவர்களுக்கு அனைவருக்கும் உணவு, தண்ணீர், மோர், பிஸ்கட், மிச்சர் உள்ளிட்ட பொருட்களை வழங்கப்பட்டது.



# ‘காலை உணவுத் திட்ட விரிவாக்கப் பணி செலவுகளை தலைமை ஆசிரியர்கள் மீது சுமத்துவதா?’ - அன்புமணி கண்டனம்

சென்னை, செப்.14–

“காலை உணவுத் திட்ட விரிவாக்கத்திற்கான பெயர்ப்பலகைகள், தட்டுகள், டம்ளர்கள் மற்றும் பிற வசதிகளுக்கான செலவை அரசே ஏற்க வேண்டும். அதை தயார் நிலையில் வைக்கும்படி தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலரால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்” என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது: தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 8-ம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்ட பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டத்தின் தொடக்க விழா வரும் 17-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான தேவைகள் அனைத்தையும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், அவர்களின் சொந்த செலவில் மேற்கொள்ள வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை ஆணையிட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மீது தேவையற்ற பொருளாதார சுமையை அரசே ஏற்படுத்துவது கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையுள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் கடந்த 2022 செப்.15-ம் தேதி அண்ணா பிறந்த நாளில் அறிமுகம் செய்யப்பட்டது. 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் 25-ம் தேதி முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இத்திட்டம் எட்டாம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டு, பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டம் என்ற பெயரில் தந்தைப் பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17-ம் தேதி தொடக்கி வைக்கப்படவுள்ளது.

பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டத் தொடக்க விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில், இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் பள்ளிகளில் புதிய



பெயர்ப்பலகைகளை 4-க்கு 2 அடி அளவில் ஸ்டீல் குழாய்களில் தயாரித்து நிறுவ வேண்டும்; பள்ளிகளுக்குத் தேவையான சமையலறை, உணவுப் பொருட்கள் இருப்பு வைக்கும் அறை, குடிநீர், மின் விளக்குகள் உள்ளிட்ட வசதிகள் சார்ந்த குறைகளை களைய வேண்டும். மாணவர்களுக்கு தட்டு, டம்ளர் ஆகியவற்றை வாங்கித் தர வேண்டும் என்று பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு ஆணையிட்டுள்ள பள்ளிக்கல்வித்துறை, இதற்காக ஒரு பைசா கூட நிதி ஒதுக்கவில்லை.

இந்த வசதிகள் அனைத்தையும் தலைமை ஆசிரியர்கள் அவர்களின் சொந்தச் செலவில் செய்ய வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருப்பது தான் அதிர்ச்சியளிக்கிறது.

ஒவ்வொரு பள்ளியிலும் அரசால் பட்டியலிடப்பட்டுள்ள பணிகளை செய்வதற்கு மாணவர்களின் எண்ணிக்கை க்கு ஏற்ப ரூ.8000 முதல் ரூ.10 ஆயிரம் வரை செலவாகக் கூடும். இந்த செலவுகளை ஒட்டுமொத்தமாக தலைமை ஆசிரியர்களின் தலையில் சுமத்துவது அநீதியாகும். காலை உணவுத் திட்டத்திற்காக பல நூறு கோடியை ஒதுக்கீடு செய்துள்ள தமிழக அரசு, இந்த வசதிகளை செய்து கொடுப்பதற்காக கூடுதலாக சில லட்சங்களை ஒதுக்குவதற்கு எந்தத் தடையும் இல்லை. அதை செய்யாமல், அச்செலவுகளை தலைமை ஆசிரியர்கள் மீது திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை ஆசிரியர்களால் சமாளிக்க முடியாது.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், அரசு மதுக்கடைகள் போன்றவற்றில் அடிப்படை வசதிகளை செய்து கொள்வதற்காக அரசு நிதி ஒதுக்காமல், அதை பணியாளர்களின் தலையில் சுமத்தியதால் தான் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு 60 ரூபாயும், அரசு மதுக்கடைகளில் பாட்டிலுக்கு 10 ரூபாயும் வசூலிக்கும் நிலை உருவானது. அந்த கலாச்சாரத்தை ஒழிக்க முடியாமல் அரசு திண்டாடிக் கொண்டிருக்கிறது. அதே கலாச்சாரத்தை பள்ளிகளுக்கும் நீட்டித்தால் அங்கும் தவறுகள் நடக்க வாய்ப்பு ஏற்பட்டு விடும். நேர்மையையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டிய பள்ளிகளில் தவறுகள் கற்பிக்கப்படக்கூடாது.

எனவே, காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள பள்ளிகளுக்கு மாவட்டக் கல்வி அலுவலரால் அனுப்பப்பட்டுள்ள இது தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். காலை உணவுத் திட்டத்திற்கான பெயர்ப்பலகைகள், தட்டுகள், டம்ளர்கள் மற்றும் பிற வசதிகளுக்கான செலவை அரசே ஏற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் த.வெ.க., பொறுப்பாளர்கள் நியமனம்

சென்னை, செப்.14–

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலுக்கு தவெக சார்பிலான தேர்தல் பொறுப்பாளர்களை அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து தவெக தலைவரும், முதல்வருமான விஜய் வெளியிட்ட அறிக்கையில், ‘வருகின்ற அக்டோபர் 6-ம் தேதி நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்ளத் தேர்தல் பணிக்குழுவும், பணிகளைக் கண்காணிக்க தேர்தல் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள். தேர்தல் கண்காணிப்பாளர்களாக அமைச்சர்கள் ஆனந்த், செங்கோட்டையன், நிர்மல் குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மதுராந்தகம் தேர்தல் பணிக்குழு:

மதுராந்தகம் தொகுதி பொறுப்பாளராக அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவும், இணைப் பொறுப்பாளர்களாக அமைச்சர்கள் பி.ராஜ்குமார், தென்னரசு, வினோத் ஆகியோர்



நியமிக்கப்படுகிறார்கள்.

துணைப் பொறுப்பாளர்களாக சோழிங்கநல்லூர் எம்எல்ஏ சரவணமூர்த்தி, செங்கல்பட்டு எம்எல்ஏ தியாகராஜன், திருப்போரூர் எம்எல்ஏ விஜயராஜ், பல்லாவரம் எம்எல்ஏ காமாட்சி, செங்கல்பட்டு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பாலாஜி (எ) மணிகண்டன் ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

தாராபுரம் தேர்தல் பணிக்குழு:

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளராக அமைச்சர் அருண்ராஜ், இணைப் பொறுப்பாளர்களாக அமைச்சர்கள் விஜய் பாலாஜி, விஜயலட்சுமி, லோகேஷ் தமிழ்ச்செல்வன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

துணைப் பொறுப்பாளர்களாக திருப்பூர் தெற்கு தொகுதி எம்எல்ஏ பாலமுருகன், திருப்பூர் வடக்கு தொகுதி எம்எல்ஏ சத்தியபாமா, பல்லடம் எம்எல்ஏ ராம்குமார், நாமக்கல் எம்எல்ஏ திலீப், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சத்யா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட குழுவினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்வார்கள். தேர்தல் கண்காணிப்பாளர்கள், இரண்டு தொகுதிகளின் தேர்தல் பணிகளைக் கண்காணிப்பார்கள்.

அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட கழகத் தோழர்கள் அனைவரும் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். வெற்றிச் சின்னமாம் விசில் சின்னம், மீண்டும் வாகை சூட வேண்டும். இடைத்தேர்தல் வரலாற்றிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்கிற புதிய வரலாறு படைக்கும் வகையில் அனைவரும் தேர்தல் பணியாற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொகுதிகளில் நம் வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நமது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளைத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக விரைவில் முன்னெடுப்போம்’ எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டு குறித்து கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்!

சென்னை, செப்.14–

தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டு மற்றும் மின்னழுத்தப் பிரச்சினை காரணமாக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகக் கூறி, துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் மற்றும் தவெக அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது X வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

“நேற்று முதல் ஊடகங்களில் வெளியாகி வரும் செய்திகளின்படி, தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. மின்சாரம் இருந்தாலும் மின்னழுத்தப்



பிரச்சினை நிலவி வருவதால், மக்கள் வெகுண்டெழுந்து வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரோ, இதைச் சரிசெய்யும் முயற்சிகளை மேற்கொள்ளாமல் தேவையில்லாத அவதூறுகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்.

மின்சாரம், ஆவின் பால் விநியோகம் என மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடும் ‘ப்யூஸ் போன’ தவெக அரசு, திசைதிருப்பும் வேலைகளை நிறுத்திவிட்டு, மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும்.”

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு தடை கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு!

சென்னை, செப்.14–

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள இடைத்தேர்தலை நடத்தத் தடை விதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் மதுராந்தகம், தாராபுரம், அம்பாசமுத்திரம், பெருந்துறை, கரூர், விராலிமலை ஆகிய 6 தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்தனர். இதையடுத்து, பெருந்துறை, கரூர், விராலிமலை மற்றும் திருச்சி கிழக்கு உள்ளிட்ட தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பாக ஏற்கனவே உயர்நீதிமன்றம் சில உத்தரவுகளைப் பிறப்பித்திருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், தேர்தல் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு தற்போது இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியான குறுகிய காலத்திலேயே, மக்கள் அளித்த தீர்ப்பை புறக்கணித்து அரசியல் காரணங்களுக்காக எம்.எல்.ஏ.க்கள் பதவி



விலகுவதால், மீண்டும் இடைத்தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களின் வரிப்பணம் செலவிடப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள சென்னை வழக்கறிஞர் சுதன், இதனைத் தடுக்கும் வகையில் உரிய நடைமுறையை வகுக்க வேண்டும் என தனது மனுவில் தெரிவித்துள்ளார். அரசியல் செய்திகளை வாசி

மேலும், அரசியல் காரணங்களுக்காக குறுகிய காலத்திலேயே எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்பவர்களை குறிப்பிட்ட காலத்திற்கு தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கும் வகையில் சட்டம் கொண்டு வருவது குறித்து ஆய்வு செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர் கோரியுள்ளார்.

அதேபோல், இந்த வழக்கு முடியும் வரை மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலை நடத்தத் தடை விதிக்க வேண்டும் என்றும், அந்தத் தொகுதிகளில் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோரின் வேட்புமனுக்களை ஏற்க தேர்தல் ஆணையத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவதைத் தடை செய்யும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை விரைவில் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ரூ.6,000 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம் தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, செப்.14–

தமிழக அரசு சார்பில் ரூ.6,000 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்களை ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஏலத்தில் பல்வேறு காலக்கெடுவைக் கொண்ட பிணையப் பத்திரங்கள் மறுவெளியீடு செய்யப்படுகின்றன. 7.49 சதவீதம் கொண்ட தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2036-க்கு ரூ.2,000 கோடி. 7.62 சதவீதம் கொண்ட பத்திரங்கள் 2041-க்கு ரூ.2,000 கோடி, 7.70 சதவீதம் கொண்ட பத்திரங்கள் 2051-க்கு ரூ.2,000 கோடி என மொத்தம் ரூ.6,000 கோடி மதிப்பிலான பத்திரங்கள் ஏலம் விடப்படவுள்ளன

# முதல்வர் விஜய் குறித்து இரட்டை அர்த்தத்தில் பேசிய தி.மு.க., எம்.எல்.ஏ.!

கள்ளக்குறிச்சி, செப்.14–

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற திமுக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேசிய எம்எல்ஏ வசந்தம் கார்த்திகேயன், முதலமைச்சர் விஜய் குறித்து இரட்டை அர்த்தத்தில் பேசியது அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மு.க.ஸ்டாலின் மிசா காலத்தில் கைது செய்யப்பட்டது குறித்து முதலமைச்சர் விஜய் பேசியதைக் கண்டித்து, கள்ளக்குறிச்சியில் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், தேசத்திற்காகவும் மக்களுக்காகவும் போராடிச் சிறையில் இருந்த தலைவர் மு.க.ஸ்டாலினின் முகம் கோணலானது உண்மை தான் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், "உனக்குக் கூட வாய் கோணலாகத் தான் உள்ளது; அது எப்படி ஆனது என்று என்னால் சொல்ல முடியாது" என முதலமைச்சர் விஜய் குறித்து இரட்டை அர்த்தத்தில் தரக்குறைவாகப் பேசியதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.




► செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரில் வணிக வாகன உலகத்தில் புதிய பரிணாமங்களை உருவாக்கவும் மகேந்திரா ட்ரக்ஸ் நிறுவனத்தில் இணைந்து பயணிக்கவும் ஸ்ரீ செல்வி மோட்டார்ஸ் சார்பில் நடத்தப்படும் இந்த சிறப்பான வாடிக்கையாளர் சந்திப்பு நிகழ்வில் மகேந்திராவின் அதி நவீன பிளாசோ ஐட்ரக் மற்றும் இதர இதில் ஏராளமானகனரக வாகனங்களின் சிறப்பு அம்சங்கள் சிறப்பு சலுகைகள் மற்றும் நிதி உதவிகள் பற்றிய முழுமையான விவரங்களை எடுத்துக் கூறினர் இந்த விழாவில் மதுராந்தகம் நகரத்தில் உள்ள அனைத்து லாரி உரிமையாளர்கள் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர் விழா ஏற்பாடு ஸ்ரீ செல்வி மோட்டார்ஸ் மகேந்திரா டிரக் ஹெவி வெகிக்கிள்ஸ் நிறுவனம் ஏற்பாடு செய்தது

# பணிக்கு பணம் பெற்ற சர்ச்சை: காங். கட்சி பொறுப்பில் இருந்து உத்தராகண்ட் முன்னாள் முதல்வர் விலகல்

புதுடெல்லி, செப்.14–

தனது உதவியாளர் பணிக்கு பணம் பெற்ற சர்ச்சை குறித்த குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியின் பொறுப்பில் இருந்து உத்தராகண்ட் மாநில முன்னாள் முதல்வர் ஹரிஷ் ராவத் விலகியுள்ளார்.

வெள்ளிக்கிழமை அன்று ஹரிஷ் ராவத்தின் உதவியாளர் சந்தன் சிங் ஜீனாவின் இல்லத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். கடந்த 2016-ல் நடைபெற்ற மாநில அளவிலான ஆட்தேர்வில் நடைபெற்ற முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் இந்த சோதனையை அமலாக்கத் துறை மேற்கொண்டது.

இது தொடர்பாக சந்தன் சிங் ஜீனா மற்றும் அவருக்கு தொடர்புடைய பல்வேறு இடங்களில் சோதனை நடைபெற்றது. அதில் ரூ.32 லட்சம் ரொக்கம் மற்றும் 200 கிராம் தங்கம், விலை உயர்ந்த 12 கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டதாக அமலாக்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதோடு சந்தன் சிங் ஜீனா மற்றும் அவரது குடும்பத்தினர் இது அந்த மாநில அரசியலில் அதிர்வலைகளை



எழுப்பியது.

தற்போது ஹரிஷ் ராவத்தின் உதவியாளராக சந்தன் சிங் ஜீனா உள்ளார். கடந்த 2014 முதல் 2017 வரையில் ஹரிஷ் ராவத் முதல்வராக இருந்தபோது, அவரது சிறப்பு பணி அதிகாரியாக சந்தன் சிங் ஜீனா இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இது குறித்து சமூக வலைதளத்தில் ஹரிஷ் ராவத் பதிவிட்டுள்ளார். அதில் கூறியதாவது: “டேராடூனில் உள்ள எனது உதவியாளர் சந்தன் சிங் ஜீனாவின் வீட்டில் இருந்து பணம் மற்றும் நகைகள் கண்டெடுக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளன. இதன் பின்னணியில் உண்மை குறித்த விவரம் வரும் நாட்களில் வெளிவரும்.

அரசு மற்றும் கட்சி பொறுப்பில் நான் இருந்த போது முக்கிய பொறுப்புகளை அவர் கவனித்துள்ளார். அவர் கடின உழைப்பாளி. தேர்வு முறைகேடு குறித்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அவர் முறைகேட்டில் ஈடுபட்டிருக்க மாட்டார் என நம்புகிறேன். அதனால் அந்த குற்றச்சாட்டை நான் ஏற்கவில்லை.

தேர்தல் குறித்து மக்கள் என்னிடம் கேட்பது உண்டு. சிபிஐ என் வீட்டு கதவை தட்டினால் தேர்தல் அறிவிப்பு வெளியாகும் என நான் சொல்வது உண்டு. ஆனால், இந்த முறை எனது வீட்டுக்கு பதிலாக எனது உதவியாளர் ஒருவரது வீட்டின் கதவை தட்டியுள்ளனர். இதன் மூலம் பொய் பிரச்சாரத்தை ஜோடிக்க முயல்கின்றனர்.

எங்களது கட்சி ஊழலுக்கு எதிராக போராடி வருகிறது. இது மாதிரியான சமயங்களில் இந்த வகையிலான குற்றச்சாட்டு கட்சியின் போராட்ட செயல்பாட்டை வலுவிழக்க செய்யும். அதனால் இந்த முக்கிய முடிவை எடுத்துள்ளேன். எனது கட்சி பொறுப்பில் இருந்து நான் விலகுகிறேன்” என்று ஹரிஷ் ராவத் தெரிவித்துள்ளார். உத்தராகண்ட் மாநிலத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது.

# பாலஸ்தீனத் ஆதரவு கோஷம்: 14 பேருக்கு எதிரான வழக்கை ரத்து செய்தது சென்னை உயர் நீதிமன்றம்

சென்னை, செப்.14–

பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியது மட்டுமே சட்டவிரோதம் ஆகிவிடாது என கருத்து தெரிவித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பாக 14 பேருக்கு எதிராக பதிவு செய்த வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலையை கண்டித்து நீலகிரி மாவட்டம் கூடலூரில் கடந்த ஆண்டு அக்டோபரில் சட்டவிரோதமாகக் கூடி, பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியதாக கூடலூரைச் சேர்ந்த முகமது என்பவர் உள்பட 14 பேருக்கு எதிராக கூடலூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி முகமது உள்ளிட்ட 14 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது, இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலையை கண்டித்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியதற்காக போலீஸார் எந்தவொரு அடிப்படையும் இல்லாமல் இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளதாகவும், உலகில் நிகழும் இதுபோன்ற சம்பவங்களை கண்டித்து குரல் கொடுக்க மனிதராகப் பிறந்த அனைவருக்கும் உரிமை உள்ளது என்றும் மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

அதற்கு ஆட்சேபம் தெரிவித்து காவல் துறை தரப்பில், இந்த வழக்கில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கை ரத்து செய்யக்கூடாது என வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனுதாரர்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக கோஷம் எழுப்பினர் என்ற ஒரு குற்றச்சாட்டைத் தவிர அவர்கள் மீது வேறு எந்த குற்றச்சாட்டும் இல்லை. மற்றவர்களுக்கு இடையூறாக செயல்பட்டனர் எனக் கூறுவதற்கும் ஆதாரங்கள் இல்லை. மேலும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியது மட்டுமே சட்டவிரோதம் ஆகிவிடாது என தெரிவித்து 14 பேர் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.



# இமானுவேல் சேகரனார் 69-வது நினைவு தினம் முன்னாள் எம்.எல்.ஏ. பழனியாண்டி மலர் அஞ்சலி

திருச்சி : செப்.13-

இமானுவேல் சேகரனாரின் 69-வது நினைவு தினம் சோமரசம்பேட்டையில் அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி, அவரது உருவப்படத்திற்கு ஸ்ரீரங்கம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து இமானுவேல் சேகரனாரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் திமுக மாவட்ட இலக்கிய அணி தலைவர் ராஜவேல், சோமரசம்பேட்டை கிளை செயலாளரும் அரசு ஒப்பந்தக்காரருமான பெரியசாமி, கே.கே. நகர் கிளை செயலாளர் கண்ணதாசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர். மேலும் கிஷோர், பிரசாந்த், சூர்யா, முருகேஷ், மகேஷ், சாந்தபுரம் வைரவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்று மலர் அஞ்சலி செலுத்தினர்.



# ஓக்கூர் வின்னராசி இல்லத்தில் உலக தற்கொலை தடுப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஓக்கூர் செப்-13

உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு, வின்னராசி சமூகப் பணியகம் மற்றும் வின்னராசி இல்லம் மனநலப் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் சார்பில் 10.09.2026 அன்று விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பர்மா காலனி, அண்ணாநகர் 'A', ஓக்கூர், ஓக்கூர் முகம், மேலமங்கலம், தென்றல்நகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், சிறுமிகள் மற்றும் வின்னராசி இல்லத்தில் தங்கியுள்ளவர்கள் என சுமார் 75 பேர் கலந்து கொண்டனர். "வாழ்க்கை விலைமதிப்பற்றது; பிரச்சினைகளுக்கு தீர்வு உண்டு; உதவி கேட்பது பலவீனம் அல்ல, அது துணிச்சல்" என்ற கருத்தை மையமாகக் கொண்டு நிகழ்ச்சி நடைபெற்றது. வின்னராசி இல்லத்திலிருந்து அண்ணாநகர் பேருந்து நிலையம் வரை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கிற்கு வின்னராசி கான்வென்ட் மேலாளர் அருட்சகோதரி ஜூலியஸ் மேரி தலைமை தாங்கினார். ஆலோசகர் அருட்சகோதரி வெல்சி வெர்க்ரிட்டா, வாழ்க்கையின் மதிப்பு, பிரச்சினைகளை நேர்மறையாக எதிர்கொள்வது மற்றும் மன அழுத்தத்தை சமாளிப்பது குறித்து எடுத்துரைத்தார். மனநல மைய பொறுப்பாளர் அருட்சகோதரி டொமினிக் மேரி, தற்கொலை எண்ணங்களைத் தடுப்பதில் அன்பு, புரிதல், பொறுமை மற்றும் சரியான நேரத்தில் உதவி பெறுவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மனவேதனையில் இருப்பவர்களை குறை கூறாமல் அன்புடன் அணுகி, அவர்களது உணர்வுகளை கேட்டு, தேவையான உதவியைப் பெறச் செய்வது அனைவரின் பொறுப்பு என வலியுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில், "உயிரைக் காப்போம்; உதவி தேவைப்படுவோருக்கு துணை நிற்போம்" என அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியை அருட்சகோதரி ஆரோக்கிய மேரி ஒருங்கிணைத்தார். ஏற்பாடுகளை ஓக்கூர் வின்னராசி இல்ல நிர்வாகிகள் செய்திருந்தனர். தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி, வி.எஸ்.வி நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட மைய சமையல் கூடத்தில், 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்குவதற்காக உணவு தயாரிக்கும் பணிகள் மற்றும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் ஆர். கஜலட்சுமி,இ.ஆ.ப.,மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., முன்னிலையில் (11.09.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அருள்மொழித்தேவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) (பொ) சிவக்குமார், நகராட்சி ஆணையாளர் சாந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

# திமுக மூத்த நிர்வாகி ராசு மறைவு ஒன்றிய துணைச் செயலாளர் சித்தலூர் எஸ்.முருகன் அஞ்சலி

சிவகங்கை: செப்-13

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கோவானூர் கிராமத்தைச் சேர்ந்த திமுக மூத்த நிர்வாகி ராசு, வயது மூப்பின் காரணமாக காலமானார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மீது கொண்ட பற்றால் ஆரம்ப காலம் முதலே திமுகவில் இணைந்து கழகப்பணியாற்றிய ராசு, கோவானூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் கட்சியின் வளர்ச்சிக்காக நீண்டகாலம் பணியாற்றியவர் என அப்பகுதி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும், அவர் பல ஆண்டுகள் திமுக கிளைக் கழக செயலாளராக பொறுப்பு வகித்து செயல்பட்டதாக கூறப்படுகிறது.

ராசுவின் மறைவையடுத்து, சிவகங்கை தெற்கு ஒன்றிய துணைச் செயலாளரும், திமுக தொழிலாளர் அணி மாவட்டத் தலைவருமான சித்தலூர் எஸ். முருகன் நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.



# பெரியபாளையத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எஸ்.விஜயகுமார் பங்கேற்பு

திருவள்ளூர், செப்.13-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் ஊராட்சி, பாரதி நகர் மற்றும் தண்டுமா நகர் ஆகிய இரண்டு இடங்களில் 2025-2026-ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்ட நிதி தலா ரூ.16 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் மொத்தம் ரூ.33 லட்சத்து 20ஆயிரம் மதிப்பில் இந்த இரு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டது. இந்நிலையில்,இந்த இரு கட்டிடங்களை திறந்து வைக்கும் நிகழ்ச்சி,அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு பாய்,சேர்,தட்டு,கிளாஸ், விளையாட்டுப்பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவி பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி என முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிகளுக்கு,எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சிகள்)சாந்தினி தலைமை தாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்) அற்புதராஜ் முன்னிலை வகித்தார்.

இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் வடக்கு மாவட்ட தவெக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எஸ்.விஜயகுமார் கலந்து கொண்டு புதிய கட்டிடங்களை திறந்து வைத்து அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகளையும் வழங்கி சிறப்புரையாற்றி பேசினார். இந்நிகழ்ச்சியில்,அரசுத்துறை அதிகாரிகள்,தவெக-வை சேர்ந்த மாவட்ட,ஒன்றிய,கிளைக்கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள்,பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கூடலூர் வட்டம், ஓவேலி லாரன்ஸ்டன் பகுதியில் புலி தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் நேரில் சென்று ஆறுதல்

நீலகிரி, செப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம் ஓவேலி 4வது டிவிசன் லாரன்ஸ்டன் பகுதியில் புலி தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

வனத்துறை அமைச்சர் அவர்கள், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் ஓவேலி 4வது டிவிசன் லாரன்ஸ்டன் பகுதியில் புலி தாக்கி உயிரிழந்த திரு. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. ரவிசந்திரன் ஆகியோரின் இல்லங்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். அதனை தொடர்ந்து, 4வது டிவிசன் லாரன்ஸ்டன் பகுதியில் வசிக்கும் 150 குடும்பங்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்களை வழங்கினார்.

பின்னர் வனத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-

நீலகிரிமாவட்டம் கூடலூர் வட்டத்திற்குட்பட்ட ஓவேலி லாரஸ்டன் பகுதியில் 2 நபர்களை



புலி தாக்கி உயிரிழந்ததை தொடர்ந்து புலியை பிடிப்பதற்காக வனத்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், புலியின் நடமாட்டத்தை கண்காணித்து பிடிப்பதற்காக 220 இடங்களில் தானியங்கி கண்காணிப்பு கேமராக்களும், 13 இடங்களில் கூண்டுகளும், 2 கும்கி யானைகளும் கொண்டு விரைவில் பிடிக்க நடவடிக்கை . வருகின்றன.

இப்பணியில் உள்ளூர் வன ஊழியர்கள் மற்றும் பிற மாவட்ட வன ஊழியர்கள் மற்றும் கால்நடை மருத்துவ குழுவினரும் புலியை பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி இன்றைய தினம் புலியை பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விரைவாக புலி பிடிக்கப்படும் என வனத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இந்நிகழ்வில் களஇயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) கிருபா சங்கர்மாவட்ட வன அலுவலர்கள் (கூடலூர்) தேவராஜ் .,கஷாப் சசாங் ரவி (நீலகிரி), துணை இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) வித்யாதர் டேன்டீ மேலாண்மை இயக்குநர் அருண்லால் டேன்டீ பொது மேலாளர் திரு.தருண் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் தகுணசேகரன், அரசு அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை துரைப்பாக்கத்தில் மாபெரும் திருக்குறள் திருவிழா உலக சாதனை முயற்சி

சென்னை, செப்.13-

சென்னை துரைப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி சார்பில், தமிழ் மொழியின் பெருமையையும், திருக்குறளின் சிறப்பையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் மாபெரும் திருக்குறள் திருவிழா 12.09.2026 அன்று காலை 9 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

லண்டன் உலக சாதனைப் புத்தகம் அமைப்பின் அதிகாரப்பூர்வ உலக சாதனை முயற்சியாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருக்குறளின் சிறப்பை எடுத்துரைக்கும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிரீன் சிட்டி அரிமா சங்கம் நிறுவனர் லயன் ஜநா கண்ணன் மற்றும் அரசு மேல் நிலைப் பள்ளி தமிழ் ஆசிரியர் இ.லோகநாதன் ஆகியோர் தலைமை விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி அரிமா சங்க சார்பில் ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரக்கன்றுகள் வழங்கப்பட்டது

மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்ட இந்நிகழ்வு, திருக்குறளின் உலகளாவிய பெருமையையும், அதன் உயரிய கருத்துகளை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தும் வகையில் அமைந்தது.

இந்த நிகழ்ச்சியில் அரிமா சங்க நிர்வாகிகள் அண்ணாமலை, அரிகிருஷ்ணன் மற்றும் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

தமிழின் பெருமை திருக்குறளின் சிறப்பு உலக சாதனை முயற்சி" என்ற நோக்கத்துடன் நடைபெற்ற இத்திருவிழா சிறப்பாக நிறைவடைந்தது.



Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161